மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். எதற்கெடுத்தாலும் நானும் பேசுவேன் என்று சொன்னால், துரை முத்துசாமிக்காக மட்டும் அவை இல்லை, 234 உறுப்பினர்களுக்காகவும் இருக்கிறது.

திரு. துரை முத்துசாமி : ஒவ்வொருவருக்கும் மூன்று தடவைகள் சந்தாப்பம் கொடுக்கிறீர்கள், அதுபோல் எனக்கும் சந்தர்ப்பம் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் கொடுக்கவில்லையென்றால், அவையிலே வந்து சேருங்கள். இங்கே, உட்காருங்கள் என்று சொன்னால் உட்கார்ந்துதான் ஆகவேண்டும்.

(6) அறிவிப்பு

பேரவையில் மானியக் கோரிக்கைகளை முன்மொழிய பரிந்துரை அளித்து ஆளுநர் அவர்களிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1978—79 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

In pursuance of Article 203, Clause (3) of the Constitution of India I, Prabhudas Balubhai Patwari, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1978-79."

Notice of Demands for Grants has already been circulated to the Members.

7. 1978—79-ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

கோரிக்கை எண். 17—கல்வி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

'' மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,75,69,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''